6. அறிக்கைகள் அளித்தல்.

(அ) உறுதிமொழிக் குழு.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1990-91 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது மற்றும் ஐந்தாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) மனுக்கள் குழு.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1990-91ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் மூன்றாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அறிவிப்புகள்.

(அ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன் வடிவு, 1990 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம்செய்தல்).

(அ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.